**கல்கமுவ பிரதேச சபை**

**குருநாகல் மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 15 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 23 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுலை 14 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கல்கமுவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 2,585,889 ஆன ஆன ஊழியர் கடன் மீதி நிதி நிலைமைக் தொடர்பான கூற்றில் அது ரூபா 2,619,048 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 33,159 கூடுதலாகக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 30 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் பொது வழங்கல் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 125,000 தொகை அக்கணக்கில் வரவு வைக்கப்படாமல் நானாவித கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த இனங்காண முடியாத ரூபா 7,797,390 ஆன 107 நிர்மாணக் கடன்பட்டோர் மீதிகள் முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் பதிவழிக்கப்பட்டமையால் திரண்ட நிதியம் மற்றும் நிர்மாணக் கடன்பட்டோர் என்பன அப்பெறுமதியால் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் போது இறுதி மீதிகளின் கீழ் 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக காணப்பட்ட மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய துணைப் பதிவேடுகளில் காணப்பட்ட மீதிகளிடையே ரூபா 382,839 ஆன இணக்கமின்மை காணப்பட்டது.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ரூபா 4,816,542 ஆன மோட்டர் கேடர் கடன்பட்டோர் கணக்கினுள் 3 வருடங்களை விஞ்சிய அறவிடப்படாமல் காணப்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 1,995,496 ஆக இருந்தது.

(ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 762,022 ஆன கடை வாடகையிலிருந்து ரூபா 503,729 தொகை 2010 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து நிலுவையாக காணப்படும் 39 மீதிகளுடன் கூடியதாக இருந்தது.

(iii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 237,600 ஆன வீதவரி 02 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையான காலப்பகுதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்தன.

(iv) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு ரூபா 772,983 நிலுவை கேள்வி கட்டணங்களிலிருந்து ரூபா 254,651 அதாவது 33 சதவீதம் 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலப்பகுதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்தன.

(v) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு நிலுவை உடன்படிக்கை பிணை வைப்புக்கள் ரூபா 1,603,426 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 866,309 அதாவது 54 சதவீதம் 02 வருடங்கள் முதல் 12 வருடங்கள் வரையான காலப்பகுதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்தன.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 01 ஆண்டு முதல் 12 ஆண்டு வரையான காலவீச்சில் தீர்வு செய்யப்படாத ரூபா 1,966,732 ஆன 196 நானாவித வைப்புக்கள் காணப்பட்டன.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் ஊழியர் கடன் மற்றும் கடன் முற்பணம் என்பவற்றின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 250,000 ஆன மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக அட்டவணைகள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை

2010 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 1,927,232 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய

வருமானம் ரூபா 15,557,272 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,068,186 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 8,489,104 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவிற்கு ரூபா 15,358,145 ஆன மூலதன உதவி பெறுவனவுகள் மற்றும் ரூபா 72,844,998 ஆன மூலதன செலவுகளை சீராக்கம் மேற்கொண்ட போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 41,929,581 ஆன பற்றாக்குறை ஒன்றாக மாறியுள்ளது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | வருமானம் | | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 19,556 | 19,933 | (377) | தனிப்பட்ட வேதனம் | 50,147 | 37,188 | 12,959 |
| (ii) | ஏனையவை | 68,461 | 48,849 | 19,612 | ஏனையவை | 22,313 | 61,714 | (2,213) |
| | உப மொத்தம் | 88,017 | 68,782 | 19,235 | உப மொத்தம் | 72,460 | 24,526 | 10,746 |
| (iii) | மூலதன வருமானம் | 15,358 | 57,815 | 42,457 | மூலதன செலவினம் | 72,845 | 66,227 | 6,618 |
| | மொத்தம் | 103,375 | 126,597 | 23,222 | மொத்தம் | 145,305 | 127,941 | 17,364 |
| | செயற்பாட்டு விளைவு | 15,557 | 7,068 | 8,489 | மிகை | (41,930) | (1,344) | (43,274) |

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 88,016,946 தொகையில் 78 சதவீதம் ரூபா 68,460,663 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் போன்ற பெறுவனவுகளினை அடக்கியுள்ளது. அவ்வாறே மூலதன வருமானமாகிய ரூபா 15,358,145 ஆன முழுத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணத்தினை அடக்கியுள்ளது.

### 2.3 வருமான நிருவாகம்

---------------------------------

### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2014 | | | 2015 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறா ன | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குை ற | மதிப்பிடப் பட்டது | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குை ற |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 1,018 | 1,192 | 300 | 1,230 | 1,201 | 473 |
| (ii) குத்தகை வாடகை | 9,620 | 10,083 | 880 | 8,400 | 5,852 | 2,021 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 2,322 | 2,322 | - | 2,340 | 2,224 | - |
| (iv) ஏனைய வருமானம் | 65,190 | 76,665 | 11,658 | 60,854 | 52,534 | 15,916 |
| மொத்தம் | 78,150 | 90,262 | 12,838 | 72,824 | 61,811 | 18,410 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் தாமதமான வாடகை பணத்திற்காக பாதுகாப்பு பிணை ஈடுசெய்யும் போது அறவிடப்பட வேண்டிய ரூபா 8,122 ஆன மிகைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய நிலுவை இறைச்சிக் கடை வாடகை வருமானம் ரூபா 114,465 ஆக இருந்தது.

(இ) நிலுவை குத்தகை வாடகை பதிவேட்டின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை 13 சொத்துக்களுக்காக ரூபா 892,487 நிலுவை வாடகை மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 21 கடைகளிலிருந்து ரூபா 4,059,522 ஆன முற்கொடுப்பனவுத் தொகை (கீமணி) 2-3 ஆண்டு காலப்பகுதி முதல் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் கடை பதிவேட்டின் பிரகாரம் ரூபா 824,142 ஆன 90 வாடகை மீதிகள் 01 - 05 வரையான காலப்பகுதியில் நிலுவையாக காணப்பட்டன.

(ஊ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 22 தொடர்பாடல் கோபுரங்கள் காணப்பட்ட போதிலும், அதற்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள், இணக்கச் சான்றிதழ்கள்

பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டில் அனுமதிப்பத்திரங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) கல்கமுவ பொது வியாபாரச் சந்தையின் 37 கடைகளில் 12 ஒரே தடவையில் கொடுப்பனவு முறைமையில் குத்தகைக்கு வழங்குவதற்காக 2012 மார்ச் 06 ஆந் திகதி வரை கேள்வி கோரி ரூபா 9,614,644 இற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக முறையான ஆவணங்கள் முறைப்படி பேணப்படாததன் பேரில் அறவிடப்பட்ட நிலுவை அளவினை குறிப்பாக இனங்காண முடியாதிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------------

பிரதேச சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ள ஊழியர்களுக்காக உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்பு தொகை செலுத்த வேண்டிய ஊழியர்களுக்காக சபையினால் அந்நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தை முறைப்படி செலுத்தாமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந் நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 2,246,901 ஆக இருந்தது. அவ்வாறே சபையினால் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 59,318 தொகை சபையின் எந்த ஊழியர்களுக்கானது என சபை அறிந்திருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிப்புக்கப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் கமநெகும விசேட செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,400,000 ஆன ஏற்பாடுகளின் கீழ் 28 முன் பள்ளி பாடசாலைகளுக்கு முன்பள்ளி உபகரணங்களை வழங்கும் செய்றதிட்டம் கல்கமுவ பிரதேச சபையின் மூலம் ஒப்பந்த முறைமையில் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், 28 முன்பள்ளிகளில் 06 இற்கு மாத்திரம் கல்கமுவ பிரதேச செயலாளரினால் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 403/01/01/08/2014 ஆம் இலக்க பிரதேச செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள விளையாட்டு உபகரணங்கள் தரமற்றதாகவும் ஆலோசனைகளுக்கு புறம்பானதெனவும் எஞ்சிய 22 இற்காக நிதி ஏற்பாட்டினை வழங்க முடியாதென தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் குறித்த 11 முன்பள்ளி பாடசாலைகளுக்கு 11 உபகரணங்களை வாங்குவதற்காக ரூபா 485,100 தொகை சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2016 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் 06 பாடசாலைகளில் விளையாட்டு உபகரணங்களை பௌதீக ரீதியாக பரீட்சிக்கும் போது இரண்டு முன்பள்ளி பாடசாலைகளின் மெரிகோ சுற்றுக்களில் ஒட்டப்பட்ட கம்பி கலன்று பயன்படுத்த முடியாத நிலைமைக்குட்பட்டிருந்தன.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

----------------------------------------------------------------------

### 4.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------------------

**பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்**

-------------------------------------------------------------------------------------------------

இலக்கம் 49-1976 கொண்ட மினி குபேட்டா டிரக்டர் 06 வருட காலம் முதல் பயன்படுத்தப்படாது அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்